# 17 தத்தைவிடு தூது

**திி.த. சரவணமுத்துப்பிள்ளை (1863 - 1922)**

தி.த. சரவணமுத்துப்பிள்ளை திருகோணமலையிலே தம்பிமுத்து என்பவருக்குப் புதல்வராகப் பிறந்தார். தி.த. கனகசுந்தரம்பிள்ளையின் (1863 - 1922) இளைய சகோதரர். இளமையிலேயே இவ்வுலக வாழ்வை நீத்தார். இவரியற்றிய செய்யுள் "தத்தைவிடு தூது'. இது மிக்க சுவையுடைய ஒரு பிரபந்தமாகும். பாரதியாரின் பெண் விடுதலை சார்ந்த சிந்தனைக்கும் இவரது கருத்துக்கள் முன்னோடியாக இருந்ததாக ஆய்வாளர்கள் கூறுவர்.

## தத்தைவிடு தூது

தேனோங்கு பூம்பொதும்பர்ச் செறிந்துபசுந் தழைபரப்பி
வானோங்கு தேமாவில் வாழுமிளம் பைங்கிளியே
மானேங்கு மைவிழியென் வஞ்சியிடைப் பைந்தொடிபால்
நானீங்கு புகலுமொழி நற்கிளியே கூறாயே
நங்கையவள் பாற்சென்று நலம்பெறநீ கூறாயே. 1

தேன்பொங்கும் பூஞ்சோலையில் செழித்து பசுமையான கலைகள் பரப்பி வானைத் தொடுமளவுக்கு வளர்ந்துள்ள தேன் சுவையுடைய மாமரத்தில் வாழும் இளமையான கிளியே! மானைப் போன்ற விழியுடையாளும் சிறிய இடையையுடையவளும் பசுமையான வளையல்களை அணிந்தவளுமான வஞ்சியிடம் போய், நானிங்கு சொல்லும் வார்த்தைகளை கூறமாட்டாயா? அழகான கிளியே நங்கையானவளிடம் சென்று நன்மை பெறுமாறு நீ கூறமாட்டாயா?

செங்கமல வாள்விழியாட் சேர் க்கக் கருதுமுவன்
மங்கைதனக் கேற்ற மணவாள னோபுகழாய்
நங்கைநிலைக் கேற்க நடக்கவல னோபுவியிற்
கொங்குமலர் மாலை குரங்கிற் களிப்பாரோ
கோதையிட மிம்மாற்றங் கூறுதியாற் பைங்கிளியே.9

சிவந்த தாமரை போல ஒளி பொருந்திடா விழிப்புடையாளிடம் சேர்க்கக் கருதும் இவன், மங்கை உனக்கேற்ற மணவாளன் என்று சொல்லுவாய். நங்கையாகிய உனக்கு ஏற்ற வகையில் நடக்க வல்லமையுடையவன். கொங்கு மலரால் மாலையை கழுத்தில் (குரங்கின்) அணிந்து சந்தோசப்படுவாரோ கோதையவளிடம் இம்மாற்றம் பற்றிக் கூறுவாயே பசுமையான கிளியே!

மூடருக்கும் பேடருக்கும் முதியோர் மெலியோர்க்குந்
தேடருநல் லிரத்தினம்போற் றெரிவையரைச் சேர்த்துவரோ
பீடுடைய கல்விநலம் பெற்றிருக்கும் வாலிபர் யாம்
வேடுவரை வேட்பேமோ விளம்பாய் பசுங்கிளியே
விரும்புவமோ சந்நியாசம் விளம்பாய் பசுங்கிளியே. 10

முட்டாளுக்கும் பேதமை உடையவருக்கும் மூத்தோர் எளியோருக்கும் தேடுவதற்கு அருமையான நல்ல இரத்தினம்போல் உள்ள அரிவையரை சேர்த்து வைப்பாயா? பெருமையுடைய கல்வியை நன்மையைப் பெற்றிருக்கும் வாலிபன் யான். வேடுவரை விரும்புவரோ சொல்வாயோ பசுமையான கிளியே. விரும்பாவிட்டால் நான் சந்நியாசியாய் போவேன். இதை அவளிடம் சொல்லு கிளியே!

பெண்ணருமை தானறியாப் பேதையர்க்குப் பெண்கொடுத்தார்
மண்ணிலுள காலம் வருத்துதற்கே பெற்றெடுத்தார்
கண்ணிலரித் தந்தைதமர் கடுநரகிற் கேயுரியர்
எண்ணியினைந்தேங்கி யிருந்து பெறும்பயனென்
என்னுயிரை மாய்த்த லியைவதாம் பைங்கிளியே. 11

பெண்ணின் அருமையை அறியாதவர்களுக்கு பெண்கொடுத்தார் உலகத்திலுள்ள காலமளவுக்கும் துன்பமடைவதற்கு பெற்றெடுத்தார். கண்ணரிய தந்தையார். இவற்றை எண்ணி நினைத்து ஏங்கி இருந்து பெறும் பயனென்ன? என்னுயிரைக் கொன்றவை இவைதான் பசுங்கிளியே!

தம்பெருமை தாமறியாத் தஞ்சமிலாப் பெண்கடமை
வெம்புலிவாய் மானென்ன வீணே கொடுத்திடுவார்
செம்பொற் றிரளுடனே வெந்துயரஞ் சேர்வதிலுஞ்
செம்பொனிலாவின்பஞ் சிறந்ததெனக் கூறுதியால்
தெரிவையவட் கிம்மாற்றஞ் சீர் க்கிளியே கூறுதியால். 12

தம்முடைய பெருமையை அறியாதவர் பெண் கடமையை எவ்வாறு அறிவார்? கொடுமையான புலிவாய்ப் பட்ட மான்போல துன்பமடைய வீணாகப் பெண்ணைக் கொடுத்திடுவார். செம்பொன்னையும் சேர்த்துக் கொடுப்பர். அப்படிக் கொடுத்தும் பெரும் துன்பமடைவதிலும் பார்க்க பெண்ணைப் பார்க்கிலும் பெண்பெறும் இன்பமே சிறந்தது எனக் கூறுவாய் பசுங்கிளியே!

உண்பதுவு முறங்குவது மூர்க்கதைகள் பேசுவதும்
பெண்கடொழி லாமென்றே பேசிடுவ ரொருசாரார்
பெண்களுக்குத் தம்பதியே பெருந்தெய்வ மன்பர் சிலர்
பெண்களுக்கு மடிமைகட்கும் பேதமில்லை யென்பர்சிலர்
பேதைமைகா ணிவர் க்கொள்கைபேர்த்தறிவாய் பசுங்கிளியே. 13

உண்பது, உறங்குவது, ஊர்க் கதைகள் பேசுவது பெண்களின் தொழிலாம் என்று பேசுவார்கள் ஒரு சாரார். பெண்களுக்கு தன் கணவனே கண்கண்ட தெய்வம் என்பார் சிலர். பெண்களுக்கும் அடிமைகளுக்கும் வித்தியாசமில்லை என்பார் சிலர். அறியாமைதான் இவர்களின் கொள்கை தரம் பிரித்தறிந்துகொள் பசுங்கிளியே!

கல்விநலம் பெற்றனரேற் காரிகையார் காதலர்க்குச்
சொல்லருநற் றுணையன்றோ தொல்லுலகு சிறக்குமன்றோ
மெல்லியர் பாற் கல்விரும் பாத வீணரெலாம்
எல்லையிலா வின்படைதற்கிடையூறென் றேயியம்பாய்
என்னிருகண் மணியனையாட் கியம்பாய் பசுங்கிளியே. 15

கல்வி நலம் பெற்றவராக இருந்தால் பெண்கள், தன்னருமைக் கணவருக்கு நல்ல துணையதாக இருப்பர். இதனால் உலகும் சிறக்குமன்றோ? பெண்கள் கல்வி கற்பது பெரும் பாவம் என்று வீணான ஆண்கள் எல்லாமே சொல்லி இன்பமடைந்திருப்பர். என் இரு கண்மணியாளுக்கு இவற்றைச் சொல்வாய் பசுங்கிளியே!

கூட்டிற் பசுங்கிளிபோற் கோதையரை யெப்பொழுதும்
வீட்டி லடைத்துவைக்கும் விரகிலருக் கியாதுரைப்பேம்
பூட்டித் திறந்தெடுக்கும் பொருளாக் கருதினரோ
கேட்டோர் நகைப்பதுவுங் கேட்டிலரோ பைங்கிளியே
கிஞ்சுகவாய்ப் பைந்தொடிபாற் கிளத்தாய் பசுங்கிளியே. 16

கூட்டிற்குள் பசுங்கிளியை அடைப்பாரைப்போல் பெண்களை எப்பொழுதும் அடைத்து வைப்பர். அப்படிப்பட்ட வீரமில்லாதவருக்கு யாது சொல்ல வேண்டும்? பூட்டித் திறந்து எடுக்கும் பொருளாகக் கருதினரோ? இதைக் கேட்பவர்கள் நகைக்கின்றார்கள் பசுங்கிளியே. இதை பசுமையான வளையல் அணிந்த என்னவளிடம் சொல்வாய் பசுங்கிளியே!

கண்ணை மறைத் தேகொடுபோய்க் காட்டில்விடும் பூஞையைப்போற்
பெண்ணை மனையடைத்துப் பின்னொருவர் கைக்கொடுப்பர்
கண்ணான்முன் கண்டுமிலர் காதலர் சொற் கேட்டுமிலர்
எண்ணாதுமெண்ணி யிருந்தயர்வர் மங்கையர்கள்
இக்கொடுமையைக் கியாதுசெய்வ திசையாய் பசுங்கிளியே. 19

கண்ணை மறைத்துக்கொண்டு போய் காட்டில் விடும் பூனையைப் போல் பெண்களை வீட்டிற்குள் அடைத்து வைத்து, பின்பு ஒருவர் கையில் பிடித்துக்கொடுத்து விடுவர். இதற்கு முதல் அவளைக் கண்ணால்கூட கண்டிருக்க மாட்டார்கள். அவரோடு ஒரு வார்த்தை பேசியிருக்கவும் மாட்டர்கள். எப்படியெல்லாம் எண்ணியிருந்தவர்கள் இந்தக் கொடுமைக்கு யாது செய்ய முடியும் சொல்வாய் பசுங்கிளியே!

தம்மனைக்கோர் பசுவேண்டிற் றாம்பலகாற் பார்த்திருந்தும்
பின்னுந் துணிவிலராய்ப் பேதுறுகள் மாந்தர் குணம்
என்னே மணவினையே லிமைப்பொழுதி லேமுடிப்பார்
சின்னப் பதுமைகொடு சிறார் செய்மணம் போலுமரோ
தெரிவையவட் கிம்மாற்றஞ் சீர் க்கிளியே கூறுதியால். 23

*தம் வீட்டிற்கு ஒரு பசுமாட்டை வாங்க வேண்டுமாயின் பல பசுவைப் பார்த்த போதிலும் முடிவெடுக்க முடியாமல் திண்டாடுவது மக்கள் குணம். ஆனால் ஒரு பெண்ணை கண்ணிமைப் பொழுது நேரத்தில் திருமணம் செய்வார். இன்னும் பெண்கள் திருமணம் செய்வது போல் தெரிவைக்கு இம்மாற்றங்களை சிறப்புடைய பசுங்கிளியே கூறுவாயாக!*

ஆணாய்ப் பிறத்த லவசியம்வே றோர் குணமும்
பேணார் த மின்னுயிராம் பெண்ணைக் கொடுத்திடுவார்
நாணார் மதியார் நகைத்தே களித்திடுவார்
வாணாள் பசுங்கிளியே மலடாக் களித்திலரே
வாள்விழியென் மங்கையிடம் மாங்கிளியே கூறுதியால். 24

*ஆணாய்ப் பிறப்பது அவசியம். வேறோர் குணமும் பார்க்காமல் உயிரான பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்திடுவார். வெட்கமடைய மாட்டார்கள் - நக்கலடித்து இன்பமடைவர். வாணாள் முழுவதையும் மலடாக களிக்கமாட்டாரோ வாள் போன்ற விழியுடைய மங்கையிடம் மாமரத்துக் கிளியே சொல்லுவாய்!*

அன்னநடை மைவிழியா ளம்பொன்மலர்க் கொம்பனையாள்
என்னிதய தாமரைக்கோ ரிலக்குமியாம் பெண்ணரசி
கன்னன்மொழி கேளாது கஞ்சமுக நோக்காது
மனினிலத்து வாழேன் மடிந்திடுவன் மங்கையர்க்கு
மற்றிப்பழி சேருமென மாழ்குவேன் பைங்கிளியே. 27

*அன்ன நடையுடையவளும் மை தீட்டப்பட்ட கண்களையுடையாளும் பொன் மலர்க்கொம்பு போன்றவளும் என்னிதயமாகிய தாமரையில் வீற்றிருக்கும் இலக்குமியாம் பெண்களுக்கெல்லாம் அரசு போன்றவள் அவளின் இனிமையான பேச்சைக் கேளாது; தாமரை போன்ற முகத்தைப் பார்க்காது வாழ மாட்டேன்; இறிந்திடுவேன். என்னவளுக்கு என்னைக் கொன்ற பழி சேருமெனத் துன்பப்படுகிறேன் பசுங்கிளியே!*

அந்தோ தவறுதவ றறியா துரைத்தனன்யான்
பைந்தார்ப் பசுங்குழலாள் பாவமறி யாள்கிளியே
தந்தைதா யாரிலரேற் றரியாளென் பாங்கருடன்
வந்தாள் மகிழ்ந்தாள் வதிந்தாள் பசுங்கிளியே
வானுலகி னின்பமெலாம் வந்தனவாற் பைங்கிளியே. 29

*ஐயோ தவறறியாது உணர்ந்துவிட்டேன். பசுமையான மாலையணிந்த பாவமறியாதவள். தந்தையைத் தாயைப் பிரித்தறியாதவள். தோழியுடன் வந்தாள் மகிழ்ந்து வாழ்ந்தாள். தேவலோகத்து இன்பமெல்லாம் அவளால் எனக்குக் கிடைத்தது பசுங்கிளியே!*

**கொங்கலர் பூஞ் சோலைவளர் மாங்கிளியே கோதையிடம்**
**நங்காய்நிற் காதலித்தே நலிவான் மெலிவானால்**
**தங்கா துயிரென்றான் தானின் சரணென்றான்**
**நங்கா யிரங்கெனவே நவில்வாய் பசுங்கிளியெ**
**நாரியர் பா லென்னிலையை நவில்வாய் பசுங்கிளியே.** 33

*மொட்டவிழ்ந்த பூஞ்சோலையில் வளர்ந்த பெரிய கிளியே என்னவளிடம் உன்னைக் காதலித்தே நலிந்து போனேன், மெலிந்து போனேன் தாங்காத துயரமடைந்து என்னுயிர் இவ்வுலகில் தங்காது தான் இனி உன்னிடம் அடைக்கலம் என் மீது இரக்கம் கொள்ளென்று கூறாய் பசுங்கிளியே!*

***தி. த. சரவணமுத்துப்பிள்ளை***

◆ *அரும்பதங்கள்*

*பூம்பொதும்பர் - பூம்புதர்*

*வஞ்சி - இளம்பெண்*
*கமலம் - தாமரை*
*வேட்பேமோ - விரும்புவோமோ*
*பூஞை - பூனை*

**வினாக்கள்**

*1. தன் காதலியிடம் எத்தகைய தகைமைகளை முன்னிறுத்தி காதலைக் கூறுமாறு கிளியிடம் தூது செல்லக் கேட்கிறான் காதலன்?*

*2. கிளி உறையும் சூழலைக் கவிஞர் எவ்வாறு வர்ணிக்கிறார்?*

*3. பெண் கடமையை அறிந்தவர் எத்தகையர்?*

*4. அறிவிலிகள் பெண்களின் இயல்பென எவற்றைக் கூறுவதாக கவிஞர் குறிப்பிடுகின்றார்?*

*5. பெண்களுக்கு கல்வி அவசியம் என்பதற்கு கவிஞர் முன்வைக்கும் காரணங்கள் எவை?*

*6. இப்பாடல்களில் வெளிப்படும் பெண் விடுதலைச் சிந்தனை குறித்து சிறு கட்டுரை எழுதுக.*

*7. நவீன தமிழிலக்கியத்தில் பெண் விடுதலைச் சிந்தனை வெளிப்படும் ஒரு குரல் என தி.த.சரவணமுத்துப்பிள்ளையைக் கருத இயலும் என்பதற்கு 'தத்தை விடு தூது' எவ்வகையில் ஆதாரம் ஆகிறது என்பதை விளக்குக.*